**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 379/2018**
**வழக்கு சாட்சி PW– 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வாசுதேவன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆறுமுக உடையார் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | சிவகிரி | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 06.08.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சிவகிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 26.03.2018ம் தேதி தலைமைக்காவலர் நடராஜன் நிலைய பொறுப்பில் இருந்தபோது திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று காலை 05.00 மணிக்கு சுடர்ஒளிவு என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து, 07.00 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.133/2018, சட்டப்பிரிவுகள் 279, 337 இதச–வின் படி முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.

பின்னர் இந்த வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அதே தேதி, காலை 08.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் கங்காதரன் மற்றும் பால்த்துரை ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆகும். பின்னர், சாட்சிகள் சுடர்ஒளிவு, வெற்றிவேல், சுரேஷ்சிங், பால்த்துரை, கங்காதரன் மற்றும் தலைமைக்காவலர் நடராஜன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், 09.04.2018 தேதியில் காலை 11.00 மணியளவில் வழக்கின் எதிரி மாயகிருஷ்ணன் என்பவரை தென்காசி காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து தக்கபிணையத்தில் விடுவித்தேன். காயம்பட்ட சுடர்ஒளிவு அன்றைய தினம் 15.40 மணிக்கு இறந்துள்ளார்.

இத்துடன் எனது விசாரணையை முடித்து வழக்கு கோப்பை ஆய்வாளர் குமரேசன் என்பவரிடம் ஒப்படைத்தேன். அவரோடு நான் பணிபுரிந்துள்ளதால் அவரின் கையெழுத்துக்கள் எனக்கு பரிட்சயமானவை. வழக்கில் அவர் பதிவு செய்து வைத்திருக்கும் ஆவணங்களைப் பார்த்து அவர்களுக்காக என்னால் சாட்சி சொல்ல முடியும்.

பின்னர், ஆய்வாளர் குமரேசன் அதே தினத்தில் காயம்பட்ட சுடர்ஒளிவு என்பவர் இறந்து விட்டதினால் இந்த வழக்கின் சட்டப்பிரிவினை 279, 304(A) IPC ஆக மாறுதல் செய்து சட்டமாறுதல்

அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அது **அ.சா.ஆ.5** ஆகும்.

இறந்து போன சுடர்ஒளிவு என்பவரின் உடலை பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்துள்ளார். அது **அ.சா.ஆ.6** ஆகும். பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதம் முதல்நிலைக்காவலர் பாலமுருகன் என்பவர் மூலம் கொடுத்துள்ளார். பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஜெயதீபனா என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். அது **அ.சா.ஆ.7** ஆகும். இத்துடன் அவர் விசாரணை முடித்து வழக்கு கோப்பினை காவல்நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

பின்னர் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் தனலட்சுமி என்பவர் விபத்திற்கு காரணமான வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் ஆனந்த் என்பவரை விசாரித்து ஆய்வறிக்கை பெற்றுள்ளார். அது **அ.சா.ஆ.8** ஆகும். பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

அ.சா.2 சுரேஷ் என்னுடைய விசாரணையில் இறந்து போன சுடர்ஒளிவு என்பவர் எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி சென்றார் என்று கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக

சொல்லப்படும் இடம் தென்காசி - திருநெல்வேலி நான்கு வழிச்சாலை என்றால் சரிதான். இருபுறங்களிலும் வணிக வளாகம் மற்றும் கடைகள் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடைகளில் உள்ள நபர்கள் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரிடம் இருந்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.08.07 16:55:00 +0530